மத்திய அரசின் நலத் திட்ட உதவிகள் கொத்தடிமைத் தொழிலாளர்களுக்குக் கிடைக்க வேண்டுமென்றால், அந்தக் கொத்தடிமைத் தொழிலாளர்கள்தான் இவர்கள் என்று நீதிமன்றம் ஒரு தீர்ப்பை வழங்க வேண்டும். அதன் பின்னர், அவர்களுக்கு மத்திய அரசிடமிருந்து நிவாரணங்கள் பெற்றுத் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 270, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

270—

குடமுழுக்கு

***25169—திரு. அ. நடராஜன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பல்லடம் தொகுதி, பல்லடம் அருள்மிகு அருளானந்த ஈஸ்வரன் திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

முற்பகல் 11–05

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன், இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் மற்றும் நகர், நாரணபுரம் கிராமம், அருள்மிகு அருளானந்தஈஸ்வரன் திருக்கோயில் பட்டியல் சாரா திருக்கோயிலாகும்.

இத்திருக்கோயிலில் போதிய நிதி வசதி இல்லை. உரிய நிதி ஆதாரம் பெற்று, திருப்பணி மேற்கொள்ள கருத்துரு பெற்று, பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2018 ஜூலை 4]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலயங்கள்தோறும் அன்னதானத் திட்டம் எனும் மகத்தான திட்டம் தந்து, மறைந்தும் மறையாமலும் மக்கள் மனதில் வாழ்ந்து கொண்டிருக்கும் மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இருக்கும் திசை நோக்கி வணங்குகிறேன்.*

மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் ஆதி திராவிடர் மற்றும் பிற வகுப்பைச் சார்ந்த நலிவடைந்த 1,000 கிராமப்புற திருக்கோயில்களைப் புனரமைப்பு செய்ய தலா ஒரு இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்தும், இந்துக்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் அவர்களுடைய புனிதத் தலங்களான மானசரோவர், முக்திநாத் மற்றும் ஜெருசலம் சென்று வர மானியம் வழங்கியதைப் போல, சிறுபான்மை மக்களாகிய முஸ்லிம் மதத்தினருக்கு ஹஜ் புனிதப் பயணம் மேற்கொள்ள வழங்கப்படும் மானியத்தை 6 கோடி ரூபாய் என உயர்த்தி வழங்க அறிவித்தும், அனைத்து மதத்தினருக்கும் பாதுகாவலராக விளங்கும் (மேசையைத் தட்டும் ஒலி) கொங்கு நாட்டுத் தங்கம், சேலத்தின் சிங்கம் மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களையும், அவருக்கு உற்ற துணையாக இருந்து ஆட்சியையும், கழகத்தையும் வழிநடத்திவரும் மாண்புமிகு துணை முதலமைச்சர் ஓ.பி.எஸ். அவர்களையும் வணங்குகிறேன். பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய தங்களையும் வணங்குகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பல்லடம் நகரத்தில் அமைந்துள்ள அருள்மிகு அருளானந்த ஈஸ்வரன் திருக்கோயில் மிகவும் பழமை வாய்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயில் 200 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட திருக்கோயிலாகும். பழமைவாய்ந்த இத்திருக்கோயிலுக்கு சாட்சியாக இத்திருக்கோயிலிலே பழமையான சத்திரம் ஒன்றும் கட்டப்பட்டுள்ளது. சித்தர்கள் வாழ்ந்தார்கள் என்பதற்கு அடையாளமாக இங்கே சித்தருடைய சமாதி ஒன்றும் உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோது, வருமானம் குறைவாக உள்ள திருக்கோயில் என்று குறிப்பிட்டார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன், கேள்வியை சுருக்கமாகக் கேளுங்கள்.*

திரு. அ. நடராஜன்: *சுருக்கமாகத்தான் கேட்கிறேன். இத்திருக்கோயிலுக்குச் சொந்தமான 3.36 ஏக்கர் நிலம் நாரணபுரம் கிராமத்தில் க.ச. எண் 584–ல் உள்ளது. பல்லடம் நகரத்தில் சிவனுக்கென்று எந்தவொரு திருக்கோயிலும் இல்லை. ஆகவே, பொது மக்களின் நலன் கருதி, இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பூர் மாவட்டம், பல்லடம் வட்டம் மற்றும் நகர், நாரணபுரம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு அருளானந்த ஈஸ்வரன் திருக்கோயில் பட்டியல் சாரா திருக்கோயிலாகும். திருப்பூர் வட்டம், பிச்சம்பாளையம் அருள்மிகு மாரியம்மன் விநாயகர் திருக்கோயிலின் செயல் அலுவலர் தக்காராக இருந்து, இத்திருக்கோயிலின் நிருவாகம் கவனிக்கப்பட்டு வருகிறது. தக்கார் நிருவகிக்கும் நிலையிலுள்ள இத்திருக்கோயிலில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரியவாறு, உபயதாரர்கள் மூலமாக திருப்பணி மேற்கொண்டு குடமுழுக்கு நடத்துவதற்கு மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு எடுத்துச் சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. நடராஜன் அவர்கள்.*

திரு. அ. நடராஜன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தமைக்கு எனது நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

பல்லடம் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பொங்கலூர் ஒன்றியம், அலகுமலை ஊராட்சியில் அமைந்துள்ள அலகுமலை அருள்மிகு ஸ்ரீ பாலதண்டாயுதபாணி திருக்கோயிலானது மலைமீது அமைந்துள்ளது. பழனிக்கும், சிவன்மலைக்கும் அடுத்தபடியாக

பக்தர்கள் இங்கேதான் அதிகளவில் வந்து செல்கிறார்கள். மேலும், மாதந்தோறும் பக்தர்கள் கிரிவலமும் செல்கிறார்கள். ஆகவே, அலகுமலை அருள்மிகு ஸ்ரீ பாலதண்டாயுதபாணி திருக்கோயிலுக்கு கிரிவலப் பாதையை அமைத்துத் தரவும், இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடத்தவும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுகின்ற அருள்மிகு ஸ்ரீ முத்துக்குமார பாலதண்டாயுதபாணி திருக்கோயில் திருப்பூர் மாவட்டம், திருப்பூர் வட்டத்தில் திருப்பூர் நகரிலிருந்து சுமார் 20 கிலோ மீட்டர் தொலைவில் அலகுமலை கிராமத்தில் சிறிய மலைக்குன்றின்மேல் அமைந்துள்ளது. இத்திருக்கோயிலுக்கு குடமுழுக்கு நடைபெற்று 15 ஆண்டுகள் ஆகிவிட்டன. சிறிய அளவிலான மராமத்துப் பணிகள் மேற்கொள்ள தொல்பொருள் வல்லுநர் இத்திருக்கோயிலை 22–12–2017 அன்று பார்வையிட்டு, ஆய்வு செய்து கருத்துருவினை வழங்கியுள்ளார். மேலும், இத்திருக்கோயிலுக்குச் செல்லும் மலைப் பகுதியிலுள்ள தார்ச் சாலை மிகவும் பழுதடைந்துள்ளது. எனவே, பழுதடைந்த தார்ச் சாலையில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள கள ஆய்வு செய்ததில், 15,50,000 ரூபாய் தேவைப்படும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.*

முற்பகல் 11–10

மேலும், இந்தத் திருக்கோயிலில் மராமத்துப் பணிகள் செய்ய தொல்லியல் துறையினால் வழங்கப்பட்ட கருத்துரு, கோவை மண்டல Screening committee *மற்றும் மாண்புமிகு உயர் நீதிமன்றக் குழுவில் வைத்து ஒப்புதல் பெற்று குடமுழுக்கு நடத்தப்படும். மேலும், மாண்புமிகு உறுப்பினர் இத்திருக்கோயிலுக்கு கிரிவலப் பாதை அமைக்க வேண்டுமென்று கோரியுள்ளார். தற்போது இக்கோயிலில், ஒவ்வொரு மாதமும் பௌர்ணமிதோறும் பக்தர்கள் மலையைச் சுற்றிவர சுமார் 1 கி.மீ. சுற்றளவுக்கு 20 அடி அகலத்தில் சலவைக்கல் மற்றும் மணல்மூலம் கிரிவலப் பாதை உருவாக்கப்பட்டுள்ளது. அதில் பக்தர்கள் கிரிவலம்*

வருகின்றனர். பௌர்ணமிதோறும் சுமார் 500 முதல் 1,000 பக்தர்கள் கிரிவலம் வருகின்றனர். கிரிவலப் பாதையைச் சுற்றிலும் திருப்பூர் பசுமை இயக்கத்தின்மூலம் மரக் கன்றுகள் நடப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றது. எனவே, தார்ச் சாலை அமைப்பதற்கு, மாண்புமிகு அம்மாவின் வழியில் நடைபெறும் அரசால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு, ஆணை பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம் அவர்கள்.*

திரு. மெ.ஆ. ஆண்டி அம்பலம்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் தொகுதி, நத்தம் கோவில்பட்டி கைலாசநாதர் கோயிலில் செண்பகவல்லி திருக்கோயில் உள்ளது. அங்கே அந்தக் கோயிலுக்குச் சொந்தமான பல ஏக்கர் நிலம் உள்ளது. அந்தக் கோயிலில் வருடத்திற்கு 1,000 திருமணங்கள் நடைபெறுகின்றன. ஆகவே, அந்தக் கோயிலில் ஒரு திருமண மண்டபம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருக்கோயிலில் திருமண மண்டபம் கட்ட வேண்டும் என்று கோரிக்கை வைத்துள்ளார். அந்தத் திருக்கோயிலின் நிதி வசதிக்கேற்பவும், பக்தர்களின் வருகையைப் பொறுத்தும் திருமண மண்டபம் கட்ட மாண்புமிகு அம்மாவின் அரசால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். இரவிச்சந்திரன் அவர்கள்.*

2018 ஜூலை 4]

திரு. கே.எஸ். இரவிச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய எழும்பூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 58–வது வார்டில் A.P. road–ல் புகழ்பெற்ற நடராஜர் திருக்கோயில் உள்ளது. கடந்த 2 ஆண்டுகளுக்கு முன்பே, ஏற்கெனவே இருந்த ஸ்தபதி அவர்கள் உபயதாரர்களின் உதவியோடு அந்தக் கோயிலைப் புதுப்பிப்பதற்கு அரசிடம் பலமுறை முயற்சி செய்தும், அதன் ஆணையாளர் அவர்களை நேரடியாகச் சந்தித்தும் அந்தத் திருக்கோயிலைப் புதுப்பிப்பதற்கு இதுவரை அனுமதி கொடுக்கப்படவில்லை.*

மூலக் கேள்விக்குச் சம்பந்தம் இல்லையென்றாலும், 78–வது வார்டில் உள்ள அங்காளம்மன் திருக்கோயில் குளத்தையும், 104–வது வார்டில் உள்ள கங்காதீஸ்வரர் கோயில் திருக்குளத்தையும் சீரமைத்து அங்கே தெப்பத் திருவிழா நடத்துவதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையங்கள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சேவூர் எஸ். ராமச்சந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் திருக்கோயில்களின் தெப்பக் குளங்களையெல்லாம் ஆழப்படுத்தி செப்பனிட வேண்டுமென்று எங்களுக்கெல்லாம் அறிவுறுத்தி ஆணையிட்டுள்ளார். அதன் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய திருக்கோயில்களின் திருக்குளங்களை ஆய்வு செய்து, மதிப்பீடு தயார் செய்து, அந்தத் திருக்குளங்களைச் செப்பனிட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவு பெற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]